ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஏ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1995.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/1995) மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்.*

*மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/1995) @ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத் திருத்த முன்வடிவை நான் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே எதிர்க்கிறேன். காரணம், மக்களாட்சித் தத்துவம் நம்முடைய நாட்டிற்கு வரவேண்டும் என்று சொன்னால் கூட்டுறவுத் துறைக்குத் தேர்தல் நடத்தியாக வேண்டும். இந்த அரசு, எப்போதோ கூட்டுறவு சங்கங்களுக்குத் தேர்தல் நடத்துகிறோம் என்று சொல்லிவிட்டு இன்னும் நடத்தாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்க ஒரு விஷயம். நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் சட்டம் படித்தவர்கள். இதுபற்றி நான் ஏற்கனவே கூறியபோது, சிலர் உயர்நீதிமன்றத்திலே தடையாணை பெற்றிருக்கிறார்கள், அதனால் தேர்தல் நடத்தமுடியவில்லை என்ற

@3-11-1995 ஆம் நாளைய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டது.

கருத்தை இந்த மன்றத்திற்குத்தெரிவித்தார்கள். பல வருடங்களாக நம்முடைய அரசின் சார்பிலே 'கவுண்ட்டர்' கூடப் போடப்படாமல் இருந்தது. தற்போது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? இந்த ரிட் பெட்டிஷன் எண் 15373/92, 1992-ஆம் ஆண்டு பெறப்பட்ட, இந்தத் தடையாணை இன்னும் நிலுவையில் இருக்கிறது. இதனை விரைவாக முடிப்பதற்கு அரசாங்கம் முயற்சிகள் எடுத்ததா என்பதை அமைச்சர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் உயர்நீதிமன்றத்திலே சிறந்த வழக்கறிஞராக இருந்தவர்கள். நீங்கள் ஏதாவது கருத்துரைகளை வழங்கி உடனடியாக இந்தத் தடையாணையை 'வெக்கேட்' செய்திருந்தால் இப்போது நாம் தேர்தலைச் சந்தித்திருக்கலாம். ஆகவே, தடையாணையை 'வெக்கேட்' செய்வதற்கு அரசு தரப்பிலே ஏதேனும் மனு போடப்பட்டிருக்கிறதா, அந்த மனுவிற்கு ஏதேனும் எண் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை இந்த மாமன்றத்திற்கு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும். தடையாணைகளை எல்லாம் களைந்தெறிந்துவிட்டு கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்துவதற்கு அரசு முன்வரவேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறைக்கு தனி அலுவலர்கள் நியமிக்கின்ற இந்த சட்டமுன்வடிவிலே, கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தலை நடத்துவதற்கு தயாராக இருக்கிறோம், இருந்தாலும் அந்த வழக்கு கோர்ட்டிலே இருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்கள். அநேகமாக நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுடைய பதவிக்காலம் முடியும் வரையில் அமைச்சர் அவர்கள் இந்த பதிலோடு முடித்துவிடுவார்கள் என்று கருதுகிறேன். ஜனநாயக பூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு கலைக்கப்பட்டு, அதற்கு தேர்தல் நடத்திடாத ஒரு ஆட்சி, ஒரு அரசு, அதற்கென ஒரு நிர்வாகம், அதற்கு ஒரு அமைச்சர் என்று சொன்னால், உண்மையிலே ஜனநாயகம் எந்த அளவிற்குக் கேலிக்கூத்தாக இருக்கிறது என்பதுதான் இன்றைக்கு இருக்கின்ற கேள்வி. அந்த முறையில் நம்முடைய கூட்டுறவுத் துறை நடந்துகொண்டிருக்கிறது. கூட்டுறவு என்பது மக்களுடைய நல்ல உறவைப் பெற்றிருக்கின்ற ஒரு அமைப்பு. வர்த்தகர்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையே ஒரு பாலமாக இருக்கக்கூடிய ஒரு அமைப்புதான் இந்தக் கூட்டுறவுத் துறை.

1995 நவம்பர் 8] [திரு. ஜி. பழனிசாமி]

பிற்பகல் *1–30*

பொதுவாக, விலைகளை ஒரு நிர்ணயிப்போடு நிர்ணயிக்கிறது கூட்டுறவு அமைப்பு. அதற்கு மக்கள் பிரதிநிதியைக் கொண்டு, ஒரு ஆலோசனையை நடத்தக்கூடிய அளவுக்கு அதனுடைய அமைப்பு இல்லாத வகையிலே, தனி அலுவலர்கள் மூலம் இந்த அமைப்பு இருப்பது என்பது, இன்றைக்குத்தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது ஒரு நல்ல அரசுக்கு, நல்ல ஆட்சிக்கு, நல்ல நிர்வாகத்திற்கு தனி அலுவலர்கள் மூலமாக நடத்துவது என்பது சாத்தியம் இல்லை. கூட்டுறவுத் துறையில், இன்றைக்கு விவசாயிகளுக்கு-- பொதுவாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும்; உரிய நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்—இன்றைக்குக் கூட்டுறவுத் துறையிலே பல்வேறு இடங்களிலே சில தவறுகள் நடைபெறுவதற்கான நிலைகள் ஏற்பட்டு இருக்கின்றன. ஆகவே, விரைவில் கூட்டுறவுத் தேர்தலை நீங்கள் நடத்த வேண்டும். அந்த வழக்கை முடிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் கூறியதுபோன்று, அந்தப் பொறுப்பை வகிக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்டத்துறையிலே பணியாற்றியவர்கள். ஆகவே, விரைவிலே அந்த வழக்கை முடிப்பதற்காக, அது முடியாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதைக் கண்டறிந்து, அதற்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையில் அளிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன். இதுபோன்று தொடர்ந்து தனி அலுவலர்கள் நியமனச் சட்டத்தை எதிர்த்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தம் என்பது, ஏதோ இன்றைக்குப் புதிதாக வந்த ஒரு திருத்தம் அல்ல. இது *1991*–லே இருந்து, இதுவரையிலே *7* நிலைகளிலே, இந்தத் தனி அலுவலர்களின் காலம் நீட்டிக்கப்பட்டு, இப்போது, எட்டாவது முறையாக *6* மாதத்திற்கு அதிகமாக்க வேண்டுமென்று நாம் கேட்டிருக்கிறோம். இதிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களும், கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்களும் ஏதோ இந்த அரசாங்கம் தேர்தலைக் கண்டு அஞ்சுவது போலவும், கூட்டுறவுத் தேர்தலை நடத்தினால் இந்த அரசிற்கு ஏதோ அதிலே ஊறு வந்துவிடுமென்று நாங்கள் அச்சப்படுவது போலவும், தங்களுடைய யூகத்திலேயும், கற்பனையினுடைய உச்சக்கட்டத்திலேயும்

நின்றுகொண்டு இங்கே பேசினார்கள். எங்களுக்கு இருக்கிற சிரமம் எல்லாம் இந்தத் தேர்தலை ஏன் நாங்கள் உடனடியாக நடத்தவில்லை என்கிற ஆதங்கம்தான் ஆளுங்கட்சிக்கு இருக்கிறதே தவிர, இன்னும் சொல்லப்போனால் இந்தக் கூட்டுறவுத் தேர்தலை நடத்தினால், எதிர்க்கட்சிகளே இல்லாத நிலை ஆகிவிடுமோ என்கிற அந்த நிலையிலேதான் எதிர்க்கட்சிகளேகூட இன்றைக்குப் பேசிக் கொண்டிருக்கிறார்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். விவாதத்திற்கு வேண்டுமென்றால், இந்த அவையிலே கொஞ்சம் ருசிகரமாக சொல்லலாம். இன்றைக்கு இந்தக் கூட்டுறவுச் சங்கங்களினுடைய தேர்தலை நடத்தாமைக்கு இந்த அரசோ அல்லது இந்தத் துறையைப் பொறுப்பேற்றிருக்கிற நானோ பொறுப்பல்ல. இதற்கு ஒரு அரசு எதற்கு, ஒரு அமைச்சர் எதற்கு என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் கேட்டார்கள். இந்தக் கேள்வியை—நான் நீதித் துறையை மதிக்கிறேன், போற்றுகிறேன், வணங்குகிறேன்—இதே கேள்வியை உச்சநீதிமன்றத்தைப் பார்த்து, உயர்நீதிமன்றத்தைப் பார்த்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்க வேண்டும். 1991–லே கொடுக்கப்பட்டது தடையாணை. இன்றைக்கு 14 முறை உயர்நீதிமன்றத்திற்கும், உச்சநீதிமன்றத்திற்கும் கடிதங்கள் எழுதியும், இன்றுவரையிலேயும் ஒரு நீதிபதிக்கு மேலாக அமரக்கூடிய அந்த இரண்டுக்கு மேற்பட்ட நீதிபதிகளினுடைய பலகையை—'பெஞ்ச்'-ஐ—அவர்கள் உருவாக்கவில்லை. பலமுறை கேட்டிருக்கிறோம். இன்றைக்கு மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள், இதற்கு முன்னாலே பேசுகிறபோது சொன்னார்கள். இந்தியாவிலே 27 இலட்சம் வழக்குகள் இன்றைக்கு பல்வேறு உயர்நீதிமன்றங்களிலே தேங்கி இருக்கின்றன என்று சொன்னார்கள். உச்சநீதிமன்றமானாலும் சரி, சென்னை, உயர்நீதிமன்றமானாலும் சரி, இந்தச் சட்டத் திருத்தத்திலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் கவனிப்பார்களேயானால், இருக்கின்ற பெஞ்சுகளிலே, 1985–ஆம் ஆண்டுக்கு முன்னாலே இருக்கின்ற வழக்குகளை மட்டும் விசாரிக்க வேண்டுமென்று ஒரு பெஞ்சை உயர்நீதிமன்றம் உருவாக்கி இருக்கிறது. அதற்கு இன்னொரு பெஞ்சையும் உருவாக்கி, அதிலே 1985–க்கு முன்னாலே, 5 ஆண்டுகளுக்கு முன்னாலே இருக்கிற வழக்குகளை விசாரிக்க வேண்டுமென்று, அந்த பெஞ்சும் வாரத்திலே ஒரு நாள் வெள்ளிக்கிழமை மட்டும் அந்த வழக்குகளை விசாரிக்கிறது. நாங்களும் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஆக, நீதிமன்றத்தினுடைய ஆணை என்கின்ற அந்தக் கயிற்றால் எங்களுடைய கைகள் பிணைக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால்,

இந்தத் தேர்தலை நடத்த முடியவில்லை. இதை மட்டும் மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும். கூட்டுறவுத் துறையிலே ஏதோ தவறு நடக்கிறது என்று போகிற போக்கிலே, பொதுவாகச் சொல்லிவிட்டு அமர்ந்திருக்கிறார், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள். எந்த இடத்திலேயும் குற்றங்கள் நடைபெறுவதற்கு இந்த அரசு எந்தக் காலக்கட்டத்திலேயும் அங்கே அனுமதிப்பது கிடையாது. அது கூட்டுறவுத் துறையானாலும் சரி, எந்தத் துறையானாலும் சரி, ஏதாகிலும் இங்கொன்றும் அங்கொன்றுமாக குற்றங்கள் இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஆதாரத்தோடு தெரியுமானால், அவைகளைக் குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால், அந்தத் தவறு உடனடியாகக் களையப்படும் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே தெரியும். அவர்களேகூட எனக்கு பல புகார்களை பலமுறை கொடுத்து இருக்கிறார்கள். நானும் உடனடியாக அதைத் திருத்தி வைத்து இருக்கிறேன். ஆக, இப்போது கூட்டுறவுச் சங்கங்களினுடைய தேர்தலை நடத்துவதற்கு இந்த அரசு எந்தவிதத்திலும் அச்சப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால், நாங்கள் பழநியை பார்த்து இருக்கிறோம். இராணிப்பேட்டையைப் பார்த்து இருக்கிறோம். மைலாப்பூரைப் பார்த்து இருக்கிறோம்; பெருந்துறையைப் பார்த்து இருக்கிறோம். இன்னும் நடக்க இருக்கின்ற அத்துணை தேர்தல்களையும் மிகவும் திட்பமாகவும் வேகமாகவும் சந்திக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். ஏதோ இந்த அரசு தேர்தலை நடத்துவதிலே அச்சப்படுகிறது என்கின்ற அந்த எண்ணத்தை எதிர்க்கட்சியிலே இருக்கிற உறுப்பினர்கள் கொள்ளக்கூடாது என்பதை எடுத்துச் சொல்லி, இந்தத் தேர்தல்கள் நடைபெறாததற்கு நாங்கள் எந்த விதத்திலும் காரணம் அல்ல; உச்சநீதிமன்றம் தடை ஆணையை எந்தக் கணம் நீக்குகிறதோ, அடுத்த கணமே சட்டத்திற்குட்பட்டு, இந்தத் தேர்தல்கள் நடைபெறும் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதிலே அரசுக்கு அதைகாலம் தாழ்த்த வேண்டும் என்ற எந்தவிதமான, எண்ணமும் இல்லை என்பதை எடுத்துச் சொல்லி, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

பிற்பகல் 1-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே

பேசுகிறபோது, அவர்கள் தேர்தலைக் கண்டு அஞ்சவில்லை; பழனியைப் பார்த்து இருக்கிறோம், இராணிப்பேட்டையைப் பார்த்து இருக்கிறோம் என்று கூறினார்கள். எல்லாம் பார்த்தவர்கள், ஏன் இந்த கூட்டுறவு தேர்தலை மட்டும் பார்க்க மறுக்கிறீர்கள் என்பது தான் என்னுடைய கேள்வி. (குறுக்கீடுகள்) சட்டப்படி நடக்கக்கூடிய ஒன்று. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதாவது, ரொம்ப குழப்பத்திலேயே பேசக்கூடாது. தடை ஆணை இருக்கிறது. அதை நீக்கி ஆகிவிட்டால் தேர்தலை உடனே நடத்தப் போகிறோம் என்று அமைச்சர் சொல்கிறார். நீங்கள் ஏன் நடத்தவில்லை, நடத்தவில்லை என்றால், தடை ஆணையை மீறி நடத்தலாம் என்று வேண்டுமானால் நீஙகள் (குறுக்கீடுகள்).

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்களே எடுத்துச் சொன்னதுபோல, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் எப்போதுமே குழப்பத்திலே இருப்பவர்தான். வழக்கறிஞர்களிலேகூட ஒன்றைச் சொல்வார்கள், "When you hav got a good case, convince the Judge; When you have got a bad case, confuse the Judge" என்று சொல்வார்கள். அப்படி இவர் குழப்பத்திலேயே இருந்து கொண்டு பேசிக்கொண்டு இருக்கிறார்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் ஏன் தேர்தலை நடத்தவில்லை என்றுதான் கேட்டுக்கொண்டு இருக்கிறோமே தவிர, ஏன் நீங்கள் அஞ்சுகிறீர்கள், அஞ்சவில்லை என்ற சப்ஜெக்ட்டுக்கு நாங்கள் வரவில்லை. நாங்கள் கேட்பது எல்லாம், அதாவது காலாகாலத்தில் தேர்தல் நடந்தாக வேண்டும். தடை ஆணை பெற்று இருக்கிறார்கள் என்று சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏன் நடத்தவில்லை என்பதற்கு அவர் பதில் சொல்லி விட்டார். தடை ஆணை இருக்கிறது; நடத்தவில்லை. முடிந்துவிட்டது அல்லவா?

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடை ஆணை இருக்கிறது என்றால், இந்த அரசு 1991-ஆம் ஆண்டு பெறப்பட்ட அந்தத் தடை ஆணையை நீக்குவதற்கு ஏதாவது மனு போட்டு இருக்கிறதா? அந்த மனுவினுடைய எண் என்ன என்றுதான் இந்த அவைக்கு ஒரு விளக்கத்தை அளிக்க வேண்டுமென்று அமைச்சரை

1995 நவம்பர் 8] [திரு. சி. ஞானசேகரன்]

நான் கேட்டுக் கொண்டு இருக்கிறேன். இப்படி யாராவது ஒருவர் தடை ஆணை பெற்றுவிட்டால் 1985-ல் நடந்த கேஸ் தான் இப்போது நடக்கப் போகிறது என்று சொன்னால், இந்த 1991 தடையாணை காரணமாக இன்னும் 10 வருடத்திற்கு கூட்டுறவு தேர்தலே இல்லை என்று முடிவு கட்டி விடுவதா என்பதை நீங்கள் விளக்க வேண்டும். அரசு என்ன முயற்சி எடுத்தது என்பதுதான் என்னுடைய கேள்வி.

Did you file any application to vacate the stay? This is my humble question.

Hon'ble Thiru C.P. Pattabiraman: Hon'ble Speaker Sir, I am answering to Hon'ble Member Thiru Gnanasekaran. When a stay is granted by the Hon'ble Court, whether it be the High Court or the Supreme Court, to vacate the stay, steps have got to be taken by filing an affidavit. But as far as this case is concerned, the Single Judge of the Madras High Court has granted stay directing that the elections for the Co-operative Societies should not be conducted till the further orders of the Court--that is the Orders of the Madras High Court. And then, the Single Judge who had passed the order has also given a direction that for vacating the stay, whoever applies for the vacation of the stay, they must go to the Bench which has got to be constituted by the High Court. For the Constitution of the Bench, we have written so many letters to our Advocates on Record to request the Chief Justice or the Registrar to constitute a Bench, but till today the High Court has not constituted the Bench. I have already explained in my earlier speech that the pendency of the so many cases--litigations in the Courts whether it be High Court or Supreme Court, they have got to come in the list periodically-chronologically taking the earliest case first, then the second case, then the third case and so on. Therefore the difficulty is only with the Supreme Court and High Court and not on the Government side. This is my answer.

பிற்பகல் 1-40

மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் எத்தனை முறை நீங்கள் எழுதியிருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். 29-10-1992 அன்றும், 30-4-1994 அன்றும், 16-6-1994 அன்றும், 20-7-1994 அன்றும், 21-9-1994 அன்றும் 21-10-1994 அன்றும், 28-11-1994 அன்றும், 11-1-1995 அன்றும், 16-2-1995 அன்றும் 9-3-1995 அன்றும் கடைசியாக 24-7-1995 அன்றும்

அங்கே இருக்கும் வழக்கறிஞர்களுக்கு எழுதி, அவர்கள் நடவடிக்கைகள் எடுத்து இருக்கிறார்கள் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசு வழக்கறிஞர்களுக்கு எழுதிய கடிதங்கள் எந்தெந்த தேதிகளில் எழுதப்பட்டன என்று இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். நீதிமன்றத்திலே பெஞ்சு கான்ஸ்டியூட் ஆக வேண்டும் என்று ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இப்போது பஞ்சாயத்து தேர்தல் விஷயத்தில் கூட சிங்கிள் ஜட்ஜிடமிருந்து பெஞ்சுக்கு அதை ரெபர் செய்திருக்கிறார்கள். முதலமைச்சரோ அல்லது அமைச்சர்களோ சீப் ஜஸ்டிசை சந்தித்து உடனடியாக பெஞ்ச் ஃபார்ம் பண்ணச் செய்யவேண்டும். இல்லாவிட்டால் பஞ்சாயத்து தேர்தலே வராது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது வழக்கு மன்றங்கள் செய்ய வேண்டியது, ஹைகோர்ட் செய்ய வேண்டியது. இங்கே அமைச்சரோ, நாமோ முடிவு செய்ய வேண்டிய விஷயம் அல்ல. அமைச்சர் அவர்கள் எழுதியிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அதைவிட சுருக்கமான வழி, இன்றைக்குத் தடையாணை வாங்கியிருப்பவர்கள் எல்லாம் உங்கள் கட்சிக்கோ அல்லது உங்களது கூட்டாளிகளுக்கோ வேண்டியவர்கள் தானே. அவர்களிடத்திலே சொல்லி அதை வாபஸ் வாங்கினால் ரொம்ப எளிதாக முடிந்துவிடும்.

திரு. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நாங்கள் யாரும் அந்தமாதிரி மனு போடவில்லை. மனு போட்டவர்கள் யாராவது இருந்தால் கூப்பிட்டுப் பேசிவிடுங்கள். ஏனென்றால் உங்களுக்குத் தெரிந்துதான் மனு போயிருக்க வேண்டும். நாங்கள் மனு போடவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதோ அந்த பெஞ்ச்-ஐ கான்ஸ்டியூட் பண்ணச் சொல்லி அரசு வழக்கறிஞர்களுக்கு கடிதம் எழுதியிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் அந்த அரசு வழக்கறிஞர்கள் நீதிமன்றத்திலே ஏதாவது மனுவைப் போட்டு உடனடியாக வழக்கை முடிக்க வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்களா என்பது தான் எனது கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது சம்பந்தப்பட்ட அமைச்சரைப் பார்த்துதான் கேட்கவேண்டும்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் எல்லாவிதமான தேதியையும் கொடுத்து,

1995 நவம்பர் 8] [திரு. கா.ப. பட்டாபிராமன்]

அங்கே நடவடிக்கை எடுக்கும்படி சொல்லியிருக்கிறோம். நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். பெஞ்ச் கான்ஸ்டியூட் பண்ணியபிறகுதான் 'வெகேடிங் தி ஸ்டே' வரமுடியும்.

It is something like putting the cart before the horse. அதாவது வண்டிக்கு முன்னாலே குதிரையைக் கட்டுவதற்குப் பதிலாக குதிரைக்கு முன்னாலே வண்டியைக் கட்டிக் கொண்டிருக்கிறார் நம்முடைய மாண்புமிகு ஞானசேகரன் அவர்கள்.

If action has got to be taken for vacating the stay, when there is a direction that the High Court must constitute a Bench, it is the duty of the High Court to constitute the Bench. Then only, we can prefer any petition. Before the formation of the Bench, no petition will lie. அதை நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். அவர் அதை எங்கே கேட்க வேண்டும்? உச்ச நீதிமன்றத்திலும், உயர்நீதிமன்றங்களிலும் 27000 வழக்குகள் தேங்கியிருக்கிறது என்று சொன்னால், உச்சநீதிமன்றமாக இருந்தாலும் சரி, உயர்நீதிமன்றமாக இருந்தாலும் சரி அங்கேயெல்லாம் நீதிபதிகள் குறைவாக இருக்கிறார்கள். அங்கேயெல்லாம் நீதிபதிகளை அதிகமாக்க வேண்டும். அப்போதுதான் இந்தப் பிரச்சினைகள் தீரும். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத் தான் சொன்னாரே அமைச்சர். திரு. பாலகிருஷ்ணன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய இராமநாதபுரம் கூட்டுறவு வங்கி மதுரையில் இருந்தது. அந்த வங்கியை 3 பிரிவுகளாகப் பிரித்து இராமநாதபுரம், காமராஜர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் என்று 3 கூட்டுறவு மத்திய வங்கிகளாக இப்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றது. அதற்கு மதுரையில் பல கோடி ரூபாய்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது தனி அலுவலர்கள் பற்றியது. மானியக் கோரிக்கை வரும்போது நீங்கள் எதை வேண்டுமானாலும் பேசலாம். இங்கே பில்லுக்கு சம்பந்தமில்லாத ஒன்றைக் கேட்கமுடியாது. (குறுக்கீடு) சொல்லட்டும் என்றால், எல்லாவற்றையும் சொல்லிக் கொண்டிருக்க முடியாது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

பிற்பகல் 1–45

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 33/1995) நிறைவேற்றப் பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

1995 நவம்பர் 8] [திரு. கா.ப. பட்டாபிராமன்]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை, மீண்டும் நாளை (9-11-1995) காலை 10 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1.46 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

54. 1992-93-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் இருபத்தொன்றாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

55. 1994-95-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் இருபத்தாறாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

16. பொது நிறுவனங்கள் குழுவின் இருநூற்று அறுபத்தாறாவது அறிக்கை, 1995-96.